சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.90 இலட்சம் நிதி உள்ளது; அந்த நிதியிலிருந்து சிறிதளவு நிதியை ஒதுக்கிக் கொடுத்து, திருப்பணிகளை விரைந்து முடித்து, கும்பாபிஷேகம் நடத்திட, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் பேரவைத் துணைத் தலைவரின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைக் கோயிலுக்குச் செல்கின்ற பாதைக்குச் சுற்றுச் சுவர் அமைக்க, தற்சமயம் அறநிலையத் துறையின்மூலமாக, டெண்டர் விடப்பட்டு, வனத் துறை அலுவலரினுடைய அனுமதியை உடனடியாகப் பெற்று, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்கு — அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு — தற்போது திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கு, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு கல்மண்டபத்தை அகற்றுவதற்கும், புதிதாக மண்டபம் கட்டவும் மற்றும் அங்கே கதவுகள் போடவுமான திருப்பணிகள் செய்வதற்காக, ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்தினுடைய நிதியிலேயிருந்தும், பொது மக்களுடைய நன்கொடையிலேயிருந்தும், கூடிய விரைவில் 50 இலட்சம் ரூபாய் அளவில், திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 87, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

87—

ஆரம்ப சுகாதார நிலையம்

***35771–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 88, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

ஆரம்ப சுகாதார நிலையம்

***45270–திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, பொன்பரப்பி ஊராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், பொன்பரப்பி கிராமத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக, சுகாதாரத் துறையிலே, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய நல்லாட்சியிலே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், குறிப்பாக, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப